சுருக்கம்

வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – கன்னியாகுமரி மாவட்டம் – விளவங்கோடு வருவாய் வட்டத்தினைப் பிரித்து கிள்ளியூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி.1(1) பிரிவு

அரசாணை (நிலை) எண்.59 நாள்: 18.02.2019,

விளம்பி வருடம், மாசி 6,
திருவள்ளுவர் ஆண்டு 2050.

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.279, வருவாய்த்[வ.நி.1(1)]துறை, நாள் 9.6.2003.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ந.க. பணி 3(4)/26717/2018, நாள் 28.10.2018.

*********

ஆணை:

கன்னியாகுமரி மாவட்டத்தில் 22.09.2018 அன்று நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தொடர்பாக கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

"விளவங்கோடு வட்டத்தினைப் பிரித்து கிள்ளியூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய கிள்ளியூர் வருவாய் வட்டம் அமைக்கப்படும் "

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள விளவங்கோடு வட்டம், குழித்துறையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது என்றும் இவ்வட்டத்தின் மொத்த பரப்பு 431.75 ச.கி.மீ ஆகும் என்றும் குழித்துறை என்ற ஒரு நகராட்சியையும், கிள்ளியூர், விளவங்கோடு என்ற இரண்டு சட்டமன்ற தொகுதிகளையும், முஞ்சிறை, மேல்புறம் மற்றும் கிள்ளியூர் ஆகிய மூன்று பஞ்சாயத்து ஒன்றியங்களையும், 15 பேரூராட்சிகளையும், 29 கிராம பஞ்சாயத்துகளையும், 5 குறுவட்டங்களையும் மற்றும் 55 வருவாய் கிராமங்களையும் கொண்டுள்ளது என்றும், விளவங்கோடு வட்டம், கடையல், நெட்டா போன்ற மலைப்பகுதி முதல் தேங்காப்பட்டணம், பூத்துறை என்ற கடல்பகுதி வரை சுமார் 50 கி.மீ வரை உள்ளது என்றும், இவ்வட்டத்திலிருந்து 15 கி.மீ தொலைவில் கிள்ளியூர் மேலக்குறும்பனை, மிடாலம், இனையம், தேங்காப்பட்டணம், இரையும்மன்துறை, தூத்தூர், கொல்லங்கோடு ஆகிய கடற்கரை கிராமங்கள் உள்ளன என்றும், எனவே, அதிக தொலைவினை கொண்ட இப்பரப்பு முழுவதும் ஒரே வட்டாட்சியரின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாக உள்ளதால் கடல் சீற்றங்களினால் ஏற்படும் பாதிப்பு மற்றும் இழப்பினை கண்காணிக்க வட்டாட்சியருக்கான பொறுப்பு மிகஅதிகமாக உள்ளது என்றும், கிள்ளியூர் பகுதிக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் மக்கள் மீன்பிடி தொழிலையும், கிள்ளியூர், முஞ்சிறை ஊராட்சி

//த.பி.பா.//

ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் இரப்பர் விவசாயத்தையும் நம்பியுள்ளனர் என்றும், இப்பகுதி மக்கள் சுமார் 25 கி.மீ. தொலைவிலுள்ள விளவங்கோடு வட்டத்திற்கு செல்வதற்கான கால விரயத்தை தவிர்க்கும் பொருட்டும், குறிப்பாக மீனவ மக்களின் குறைகளை விரைந்து தீர்க்கும் பொருட்டும், விளவங்கோடு வட்டத்தை பிரித்து புதிய கிள்ளியூர் வட்டம் உருவாக்குவது அவசியமாகிறது என்றும் தெரிவித்துள்ளார். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு மற்றும் விளவங்கோடு வட்டத்தின் மக்கள் தொகை பெருக்கம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் பொதுமக்களின் நலன் கருதியும், இயற்கை பேரிடர் காலங்களில் வட்ட அளவில் நிர்வாக செயல்திறனை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் காரணமாகவும், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 12.10.2018–அன்று புதிய வட்டம் உருவாக்குவதற்கான உயர்மட்டக்குழுவின் ஆய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், விளவங்கோடு வட்டத்திலிருந்து உத்தேசிக்கப்பட்டுள்ள கிள்ளியூர் புதிய வருவாய் வட்டத்தை பிரித்த பின்னர், புதிதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிள்ளியூர் வட்டத்திற்கான பரப்பளவு 250 ச.கி.மீ. குறைவாக 154.71 ச.கி.மீ. பரப்பளவு மட்டுமே உள்ளது என்றும், புதிய வட்டப்பிரிவினைக்கு பின் எஞ்சியுள்ள விளவங்கோடு வட்டத்திற்கான வருவாய் கிராமங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வரையறுக்கப்பட்டுள்ள அளவுகோல்களின்படி பூர்த்தியாகவில்லை என்றும், எனினும் மேற்படி அரசாணையில், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில், நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் இம்மாவட்டத்திற்கு பொருந்தாது என்பதால், இதனை சிறப்பினமாகக் கருதி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை ஏற்றுக்கொண்டு, கிள்ளியூரை தலைமையிடமாகக் கொண்டு கிள்ளியூர் புதிய வருவாய் வட்டம் உருவாக்கிடவும் உயர்மட்டக்குழு பரிந்துரைத்துள்ளது என தெரிவித்துள்ளார். மேலும், மீனவ மக்களின் குறைகளை விரைந்து நிவர்த்தி செய்யவும் அரசின் வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை பெறுவதில் மக்களுக்கு ஏற்படும் காலதாமதத்தை குறைக்கவும், இயற்கை பேரிடர் காலங்களில் நிருவாக செயல்திறனை மேம்படுத்தவும், விளவங்கோடு வட்டத்தினை பிரித்து 2 குறுவட்டங்கள் மற்றும் 27 வருவாய் கிராமங்களுடன் கிள்ளியூரை தலைமையிடமாக கொண்டு ஒரு புதிய வருவாய் வட்டம் உருவாக்கலாம் என தெரிவித்துள்ளார்.

4. மேலும், தற்போதைய விளவங்கோடு வட்டம் மற்றும் புதிதாக உருவாக்கப்படும் கிள்ளியூர் வட்டம் ஆகியவற்றின் ஆட்சி எல்லைகள் (இணைப்பு–III) தொடர்பான அடிப்படை விவரங்களை தெரிவித்துள்ளார். மேலும், உருவாக்கப்படவுள்ள கிள்ளியூர் வட்டத்திற்கு பொதுப்பிரிவு, சமூகப் பாதுகாப்புத் திட்டம், தேர்தல் பிரிவு, வட்ட வழங்கல் பிரிவு, கிராம நிருவாகம், நில அளவை பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு மொத்தம் 24 பணியிடங்கள் உருவாக்கிட ஒப்பளிப்பும், ஓராண்டிற்கான தொடரும் செலவினமாக ரூ.1,59,90,300/–ம் மற்றும் தொடராச் செலவினமாக ரூ.17,28,000/–மும் ஒப்பளிப்பு செய்து வழங்கிடுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு வருவாய் வட்டத்தினைப் பிரித்து கிள்ளியூரை தலைமையிடமாகக் கொண்டு, மிடாலம் மற்றும் பைங்குளம் ஆகிய 2 குறுவட்டங்கள் மற்றும் 27 வருவாய் கிராமங்களுடன் கிள்ளியூர் புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) கிள்ளியூர் புதிய வருவாய் வட்டத்திற்கு உருவாக்கப்படவுள்ள 91 பணியிடங்களில் 72 பணியிடங்களை மறுபரவலமர்த்தல் மூலமும் 15 பணியிடங்களை வருவாய்த்துறைக்கும், 4 பணியிடங்களை நிலஅளவைத்துறைக்கும் ஆக மொத்தம் 19 பணியிடங்களை (இணைப்பு–1a –இல் உள்ளபடி) புதியதாக உருவாக்குவதன் மூலமும் தோற்றுவிக்கப்படுகிறது. மேலும், ஏற்கனவே செயல்பட்டு வரும் விளவங்கோடு வட்டத்திற்கு 4 புதிய பணியிடங்கள் (இணைப்பு–1b–இல் உள்ளபடி) தோற்றுவிக்கப்படுகிறது.

(iii) கிள்ளியூர் புதிய வருவாய் வட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு ஏற்படும் தொடரும் செலவினம் ரூ.**1,05,63,970/–**ம் (ஒரு கோடியே ஐந்து இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து எழுபது மட்டும்) தொடராச் செலவினமாக ரூ.**18,66,000**/–மும் (ரூபாய் பதினெட்டு இலட்சத்து அறுபத் தாறாயிரம் மட்டும்) பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. மேலும், ஏற்கனவே செயல்படும் விளவங்கோடு வட்டத்திற்கு புதிதாக உருவாக்கப்படவுள்ள 4 பணியிடங்களுக்கு பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் தொடர்பாக ஆண்டொன்றுக்கு ரூ.**24,59,364/–**க்கு (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து முந்நூற்று அறுபத்து நான்கு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

அ) தொடரும் செலவினங்கள்:-

| வ. எண். | விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (தோராயமாக ஆண்டொன்றுக்கு (கணக்கீட்டுத்தாளில் உள்ளபடி) | 1,02,39,970 |
| 2 | அலுவலக கட்டிட வாடகை (பொதுப் பணித்துறையின் பரிந்துரையின் பேரில் நிர்ணயம் செய்யப்படும்) | 0 |
| 3 | மின்சாரக் கட்டணம் | 1,20,000 |
| 4 | எரிபொருள் (டீசல்) (2 வாகனங்களுக்கு) | 1,92,000 |
| 5 | தொலைபேசி கட்டணம் | 12,000 |
| | மொத்தம் | **1,05,63,970** |

//த.பி.பா.//

ஆ) தொடராச் செலவினங்கள்:-

| வ.எண். | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | தளவாடங்கள் | 4,00,000 |
| 2 | ஈப்பு –2 | 12,70,000 |
| 3 | தொலைபேசி இணைப்பு | 6,000 |
| 4 | கணினி | 75,000 |
| 5 | பிரிண்டர் (அச்சு பதிப்பு இயந்திரம்) | 30,000 |
| 6 | ஜெராக்ஸ் இயந்திரம் | 65,000 |
| 7 | பேக்ஸ் இயந்திரம் (தொலையச்சு) | 10,000 |
| 8 | தீயணைப்பான் | 10,000 |
| | **மொத்தம்** | **18,66,000** |

(v) குரூப் கிராமங்களை பிரித்து புதியதாக குரூப் கிராமங்களை உருவாக்குதல் தொடர்பாக நடைமுறையில் உள்ள விதிமுறைகள், சட்டம் மற்றும் அரசாணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(vi) இரவுக் காவலர், மசால்சி மற்றும் புல உதவியாளர் போன்ற பணியிடங்கள் அரசு ஆணை (நிலை) எண்.49, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 14.5.2002–இன்படி வெளிமுகமை (outsourcing) மூலமாக ஒப்பந்த (contract) அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

(vii) அலுவலக உதவியாளர் பணியிடங்களை தமிழ்நாடு அடிப்படைப்பணிக்கான சிறப்பு விதிகளில், விதி–4(a) (நியமனம்)–ஐயும், அரசாணை (நிலை) எண்.44, தொ(ம)வே.வா.துறை, நாள் 11.03.2015–ஐயும் உடன் நிகழ்வாக பின்பற்றப்படுவதுடன், நடைமுறையில் உள்ள உரிய விதிகள்/ சட்டம்/ அரசாணைகளை பின்பற்றி நிரப்பப்பட வேண்டும்.

(viii) மறுபரவலமர்த்தல் மூலம் விளவங்கோடு வருவாய் வட்டத்திலிருந்து கிள்ளியூர் புதிய வருவாய் வட்டத்திற்கு மாற்றப்பட வேண்டிய பணியிடங்கள் அப்பணியிடங்களுக்குரிய தளவாடங்களுடன் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

(ix) இது ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும் என்பதால் புதுப்பணி தொடர்பான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(x) ஏற்கனவே உள்ள வட்டங்களில், வட்டப் பிரிவினைக்குப்பின் உள்ள பணியிடங்கள் பொதுவான பணியாளர் மாதிரியில் (Generalized Staff Pattern) வரையறுத்துள்ளவற்றிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(xi) அவ்வாறு மிகைப்பணியிடமாக கண்டறியப்பட்ட பணியிடங்கள் அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும் அல்லது தேவைப்படும் இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். இல்லையெனில், புதிய வருவாய் வட்டம் துவக்கப்பட்டவுடன் அப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக வைக்கப்பட வேண்டும். அப்பணியிடங்களுக்கு சம்பளம் பெற்று வழங்கக் கூடாது.

(xii) அலுவலகத்திற்கான வாடகை பொதுப்பணித்துறை பரிந்துரையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பெற்று வழங்க வேண்டும்.

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**I <u>பணியாளர் சம்பளங்கள்</u>**

சம்பளம் மற்றும் தகுதியுள்ள பிறபடிகள் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மறுபரவலமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு கீழக்கண்ட கணக்குத் தலைப்பு / உப தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

(i) <u>வருவாய் பணியிடங்கள்</u>
2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –மாநிலச் செலவினங்கள் –AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(ii) <u>தேர்தல் பணியிடங்கள்</u>
2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –மாநிலச் செலவினங்கள் –AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(iii) <u>நில அளவைப் பணியிடங்கள்</u>
2029–00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – மாநிலச் செலவினங்கள்–AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2029 00 102 AF 0105)

(iv) <u>குடிமைப் பொருள் பணியிடங்கள்</u>
3456–00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் AB மாவட்ட பணியாளரமைப்பு – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 3456 00 001 AB 0108)

**II 2053–00** மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – மாநிலச் செலவினங்கள் – **AB** வட்டப் பணியாளரமைப்புகள்

(அ) <u>05 அலுவலகச் செலவுகள் 01 தொலைபேசிக் கட்டணங்கள் ரூ.18,000/–</u>
தொடரும் செலவினம் ரூ.12,000/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.6,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0513)

(ஆ) <u>05 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 0531)

//த.பி.பா.//

(இ) 05 அலுவலகச் செலவுகள் – 05 அறைகலன்கள் ரூ.4,00,000/–
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AB 0559)

(ஈ) 06 வாடகை; கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை
(பொதுப்பணித்துறையின் இறுதி திட்ட மதிப்பீட்டிற்கு உட்பட்டது)
(த.தொ.கு 2053 00 094 AB 0611)

(உ) 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ.85,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 1914)

(ஊ) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.12,70,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 2119)

(எ) 45 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.1,92,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 4500)

(ஏ) 76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.1,05,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 7614)

7. மேலே பத்தி 5–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணியாகும் (New Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு ஒப்புதல் பெறும்வரை தேவைப்படும் சரியான தொகையினை கணக்கிட்டு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு செய்ய தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி விதிகள் 1963–இன் இணைப்பிலுள்ள படிவம் 'அ'–ன்படி இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வட்டம் 18.02.2019–ஆம் நாள் முதல் செயல்படும்.

9. கிள்ளியூர் வருவாய் வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 5–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இந்த அரசாணை நிதித்துறையின் கோ.எண்.7020/நிதி(வருவாய்), நாள் 18.02.2019 மற்றும் அ.சா.கு.எண்.8088/மை.ம.ஆபி/2019, நாள் 18.02.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2762 (இரண்டாயிரத்து எழுநூற்று அறுபத்து இரண்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–600 079.
(அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)

கூடுதல் தலைமைச் செயலாளர்/
வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–600 005.
கூடுதல் தலைமைச் செயலாளர்/
நில நிருவாக ஆணையர், சென்னை–600 005.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர்/ ஆணையர், நகர்ப்புற
நில உச்சவரம்பு (ம) நகர்ப்புற நிலவரித்துறை, சென்னை–600 005.
கூடுதல் தலைமைச் செயலாளர்/ நிலச் சீர்திருத்த ஆணையர், சென்னை–600 005.
இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–600 005.
ஆணையர், குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர்பாதுகாப்பு, சென்னை–600 005.
மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–600 018.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–600 018. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–600 018.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–600 009.
மாநில கணக்காயர் (RAO) சென்னை–600 009.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–600 002.
அனைத்துத் துறை தலைவர்கள்/ அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–600 104.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை–600 009.
ஆணையர், கருவூலக்கணக்கு துறை, சென்னை–600 015.
இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம்,
இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை–600 090.

<u>நகல்:</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர், (வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை)
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
நிதித் (வ.செ.பொது–I/ வ.செ.பொது–II/ வருவாய்/கக–3/ கூஉ(ம)நுபா/
பொதுப்பணி- I/மை.மஆபி) துறை, சென்னை–600 009.
சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/2/19

பிரிவு அலுவலர்
18/2/19

## இணைப்பு - I (a)

அரசாணை (நிலை) எண்.59, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019
கிள்ளியூர் புதிய வருவாய் வட்டத்திற்கு புதியதாக ஒப்பளிக்கப்படும் பணியிடங்கள்

| வ.எண். | பணியிடங்களின் பெயர் | ஊதிய விகிதம் (in pay revised scale) | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ | பொதுப்பிரிவு | | |
| 1 | வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/- நிலை-20, ரூ.37,700/- ரூ.1,19,500/- | 1 |
| 2 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/- நிலை-2, ரூ.15,900/- ரூ.50,400/- | 1 |
| 3 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/- நிலை-1, ரூ.15,700/- ரூ.50,000/- | 2 |
| 4 | இரவுக்காவலர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002-ன்படி | 1 |
| 5 | மசால்சி (Masalchi) | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002-ன்படி | 1 |
| ஆ | சமூக பாதுகாப்புத்திட்டம் | | |
| 6 | தனி வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/- நிலை-20, ரூ.37,700/- ரூ.1,19,500/- | 1 |
| 7 | தட்டச்சர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/- நிலை -8, ரூ.19,500/- ரூ.62,000/- | 1 |
| 8 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/- நிலை-2, ரூ.15,900/- ரூ.50,400/- | 1 |
| 9 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/- நிலை-1, ரூ.15,700/- ரூ.50,000/- | 1 |
| 10 | ஈப்பு ஓட்டுநர் | TEXCO பரிந்துரையின் அடிப்படையில் | 1 |
| இ | தேர்தல் பிரிவு | | |
| 11 | துணை வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/- நிலை-18, ரூ.36,900/- ரூ.1,16,600/- | 1 |
| ஈ | வட்ட வழங்கல் பிரிவு | | |
| 12 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.20,600/- நிலை-10, ரூ.20,600/- ரூ.65,500/- | 1 |
| 13 | இளநிலை வருவாய் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/- நிலை -8, ரூ.19,500/- ரூ.62,000/- | 1 |
| 14 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/- நிலை-1, ரூ.15,700/- ரூ.50,000/- | 1 |
| ஈ | நில அளவைப்பிரிவு | | |
| 15 | வட்ட துணை ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,600/- நிலை-12, ரூ.35,600/- ரூ.1,12,800/- | 1 |
| 16 | வட்ட சார் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/- நிலை-11, ரூ.35,400/- ரூ.1,12,400/- | 1 |
| 17 | முதுநிலை வரைவாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/- நிலை-11, ரூ.35,400/- ரூ.1,12,400/- | 1 |
| 18 | புல உதவியாளர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002-ன்படி | 1 |
| | மொத்தம் | | 19 |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - I (b)

**அரசாணை (நிலை) எண்.59, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019 ஏற்கனவே செயல்பட்டு வரும் விளவங்கோடு வருவாய் வட்டத்திற்கு புதியதாக ஒப்பளிக்கப்படும் பணியிடங்கள்**

| வ.எண். | பணியிடங்களின் பெயர் | ஊதிய விகிதம் (in pay revised scale) | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ | சமூக பாதுகாப்புத்திட்டம் | | |
| 1 | தட்டச்சர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/– நிலை –8, ரூ.19,500/– ரூ.62,000/– | 1 |
| 2 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/– நிலை–2, ரூ.15,900/– ரூ.50,400/– | 1 |
| 3 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/– நிலை–1, ரூ.15,700/– ரூ.50,000/– | 1 |
| ஆ | நில அளவைப்பிரிவு | | |
| 4 | முதுநிலை வரைவாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/– நிலை–11, ரூ.35,400/– ரூ.1,12,400/– | 1 |
| | மொத்தம் | | 4 |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

18/2/19

பிரிவு அலுவலர்.

18/2/19

## இணைப்பு- II

**அரசாணை (நிலை) எண்.59, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019**
**கிள்ளியூர் புதிய வருவாய் வட்டத்திற்கான பணியிட விவரங்கள்**

கிள்ளியூர் புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்பட்ட பின்னர், விளவங்கோடு வருவாய் வட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் மற்றும் புதிய வருவாய் வட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட வேண்டிய மற்றும் புதியதாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் ஆகியவற்றின் விவரம் பொதுவான பணியாளர் மாதிரி **(Generalized staff pattern)**யின்படி பின்வருமாறு தரப்படுகிறது.

| வ. எண் | பணியிடங்கள் | தற்காலிகம் / நிரந்தரம் | விளவங்கோடு வட்டத்தின் தற்போதைய பணியிடங்கள் | பொதுவான பணியாளர் மாதிரி (Generalized Staff Pattern)யின்படி | | | கிள்ளியூர் வட்டத்தின் பணியிடங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | விளவங்கோடு வட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | கலைக்கப்பட வேண்டிய மிகைப் பணியிடங்கள் | புதிதாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மாறுதல் செய்யப்பட வேண்டிய பணியிடங்கள் | புதியதாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| அ. பொதுப்பிரிவு | | | | | | | | | |
| 1. | வட்டாட்சியர் | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | நி | 2 | 1 | – | – | 1 | – | 1 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | நி | 2 | 1 | 0 **(1a)** | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | – | – |
| 4 | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நி | 5 | 3 | – | – | 2 | – | 2 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 5 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | 10 | 3 | 4(***) **(1b)** | – | 2 | – | 2 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 6 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | 4 | 2 | – | – | 2 | – | 2 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 7 | தட்டச்சர் | நி | 2 | 1 | – | – | 1 | – | 1 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 8 | பதிவறை எழுத்தர் | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 9 | அலுவலக உதவியாளர் | நி | 7 | 5 | – | – | 2 | – | 2 |
| | | த | – | – | – | – | – | 2 | 2 |

//த.பி.பா.//

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | ஈப்பு ஓட்டுநர் | நி | 1 | 1 | – | – | 1 c (வ.வ.பி) | 0 | 1 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 11 | இரவுக் காவலர் | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 12 | மசால்சி (Masalchi) | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| | மொத்தம் | | 37 | 21 | 4 | – | 11 | 6 | 17 |
| ஆ. சமூக பாதுகாப்புத் திட்டம் | | | | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | 2 | 1 | – | – | 1 | – | 1 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 3 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | 1 | 1 | – | – | 1 d (வ.வ.பி) | 0 | 1 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 4 | தட்டச்சர் | நி | – | – | – | 1 | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 5 | பதிவறை எழுத்தர் | நி | – | – | – | 1 | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | நி | – | – | – | 1 | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 7 | ஈப்பு ஓட்டுநர் | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| | மொத்தம் | | 5 | 4 | 0 | 3 | 2 | 5 | 7 |

..3..

| இ. தேர்தல் பிரிவு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | துணை வட்டாட்சியர் | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | 1 | 1 | – | – | 1 b (பொது) | 0 | 1 |
| | | த | – | – | – | – | – | – | – |
| | மொத்தம் | | 2 | 2 | – | – | 1 | 1 | 2 |

| ஈ) வட்ட வழங்கல் பிரிவு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வட்ட வழங்கல் அலுவலகர் (துணை வட்டாட்சியர் நிலை) | நி | 1 | 1 | – | – | 1 a (பொது) | 0 | 1 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை ) | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 3 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 4 | தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவுயாளர் நிலை) | நி | 3 | 1 | 0 (1 d) | – | 1 | – | 1 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 5 | அலுவலக உதவியாளர் | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 6 | ஈப்பு ஓட்டுநர் | நி | 1 | – | 0 (1 c) | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | – | – |
| | மொத்தம் | | 8 | 5 | 0 | – | 2 | 3 | 5 |
| உ) கிராம நிர்வாகம் | | | | | | | | | |
| 1 | கிராம நிர்வாக அலுவலர் | நி | 55 | 28 | – | – | 27 | – | 27 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 2 | கிராம உதவியாளர் | நி | 55 | 28 | – | – | 27 | – | 27 |
| | | த | – | – | – | – | – | – | – |
| | மொத்தம் | | 110 | 56 | – | – | 54 | – | 54 |

//த.பி.பா.//

| ஊ) நில அளவைப்பிரிவு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | வட்டத்துணை ஆய்வாளர் | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 3 | குறுவட்ட நில அளவர் | நி | 5 | 3 | – | – | 2 | – | 2 |
| | | த | – | – | – | – | – | – | – |
| 4 | முதுநிலை வரைவாளர் | நி | – | – | – | 1 | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| 5 | நில ஆவண வரைவாளர் | நி | 1 | 0 | 1 (***) | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | – | – |
| 6 | புல உதவியாளர் | நி | 1 | 1 | – | – | – | – | – |
| | | த | – | – | – | – | – | 1 | 1 |
| | மொத்தம் | | 9 | 6 | – | 1 | 2 | 4 | 6 |
| ஆக மொத்தம் (அ+ஆ+இ+ஈ+உ+ஊ) | | | 171 | 94 | 5 | 4 | 72 | 19 | 91 |

**(1a)** பொதுப்பிரிவிலிருந்து மிகைப் பணியிடமாக கண்டறியப்பட்ட ஒரு மண்டல துணை வட்டாட்சியர் பணியிடத்தை வட்ட வழங்கல் பிரிவிற்கு மாற்றலாம்.

**(1b)** பொதுப்பிரிவிலிருந்து மிகைப் பணியிடங்களாக கண்டறியப்பட்ட ஐந்து முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) பணியிடங்களில் ஒரு பணியிடத்தை தேர்தல் பிரிவிற்கு மாற்றலாம். மேலும் மீதமுள்ள 4 பணியிடங்களை கலைக்கலாம்.

**(1c)** வட்ட வழங்கல் பிரிவிலிருந்து மிகைப் பணியிடமாக கண்டறியப்பட்ட ஒரு ஈப்பு ஓட்டுநர் பணியிடத்தை பொதுப்பிரிவிற்கு மாற்றலாம்.

**(1d)** வட்டவழங்கல் பிரிவிலிருந்து மிகைப் பணியிடமாக கண்டறியப்பட்ட ஒரு தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) பணியிடத்தை சமூக பாதுகாப்புத் திட்ட பிரிவிற்கு மாற்றலாம்.

(***) கலைக்கப்பட வேண்டிய மிகைப் பணியிடங்கள்

<u>விளவங்கோடு வட்டத்தில் உள்ள மொத்தப் பணியிடங்கள் – 171</u>

ஏற்கனவே செயல்பட்டு வரும் விளவங்கோடு வட்டத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்ட பணியிடங்கள் – 94
கிள்ளியூர் புதிய வருவாய் வட்டத்திற்கு மறுபரவலமர்த்தல் செய்யப்படும் பணியிடங்கள் – 72
மிகைப் பணியிடங்கள் – 5

-----

மொத்தப் பணியிடங்கள் 171

-----

<u>புதியதாக உருவாக்கப்பட்ட பணியிடங்கள் – 23</u>

கிள்ளியூர் புதிய வருவாய் வட்டம் – 19
ஏற்கனவே செயல்பட்டு வரும் விளவங்கோடு வட்டம் – 4

<u>கிள்ளியூர் புதிய வருவாய் வட்டத்தில் உள்ள மொத்த பணியிடங்கள் – 91</u>

மறுபரவலமர்த்தல் மூலம் ஏற்படுத்தப்பட்ட பணியிடங்கள் – 72
புதியதாக உருவாக்கப்பட்ட பணியிடங்கள் – 19

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - III

### அரசாணை (நிலை) எண்.59, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019

### ஆட்சி எல்லை பட்டியல்

| வ. எண் | விபரம் | ஆட்சி எல்லை | | | அரசாணை(நிலை) எண். 279, வ.து, நாள் 9.6.2003–இன் படியான அளவுகோல்கள் |
|---|---|---|---|---|---|
| | | தற்போதுள்ள விளவங்கோடு வட்டம் | உத்தேசிக்கப்படும் கிள்ளியூர் புதிய வட்டம் | பிரிவினைக்கு பின் எஞ்சிய விளவங்கோடு வட்டம் | |
| 1. | தலைமையிடம் | விளவங்கோடு | கிள்ளியூர் | விளவங்கோடு | |
| 2. | பரப்பளவு (ச.கி.மீட்டரில்) | 431.75 | 154.71 | 277.04 | குறைந்த அளவு 250 ச.கி.மீ அதிக அளவு 2000 ச.கி.மீ |
| 3. | மக்கள் தொகை (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) | 5,87,924 | 3,71,224 | 2,16,700 | குறைந்த அளவு 1,00,000 அதிக அளவு 5,50,000 |
| 4. | வருவாய்க் கோட்டத்தின் பெயர் | பத்மநாபபுரம் | பத்மநாபபுரம் | பத்மநாபபுரம் | -- |
| 5. | சட்டமன்ற தொகுதி | விளவங்கோடு, கிள்ளியூர் | கிள்ளியூர் விளவங்கோடு (பகுதி) | விளவங்கோடு (பகுதி) | -- |
| 6. | பாராளுமன்ற தொகுதி | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | -- |
| 7. | நகராட்சிகளின் எண்ணிக்கை | குழித்துறை | --- | குழித்துறை | -- |
| 8. | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | 1.மேல்புறம்<br>2.கிள்ளியூர்<br>3.முஞ்சிறை | 1.கிள்ளியூர்<br>2.முஞ்சிறை | 1.மேல்புறம் | 2 அல்லது 3 ஊராட்சி ஒன்றியங்கள் |
| 9. | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | 15 | 9 | 6 | .. |
| 10. | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 1. பைங்குளம்<br>2. விளவங்கோடு<br>3. இடைக்கோடு<br>4. அருமனை<br>5.மிடாலம் | 1. மிடாலம்<br>2. பைங்குளம் | 1.விளவங்கோடு<br>2. இடைக்கோடு<br>3.அருமனை | ... |
| 11. | வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை | 55 | 27 | 28 | குறைந்த அளவு 30 கிராமங்கள் |
| 12. | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | 29 | 19 | 10 | ... |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - IV

**அரசாணை (நிலை) எண்.59, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019**

### அறிவிக்கை – I

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள விளவங்கோடு வட்டத்தினைப் பிரித்து 2019–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18–ஆம் நாளிலிருந்து கிள்ளியூரைத் தலைமையிடமாகக் கொண்டு கிள்ளியூர் புதிய வருவாய் வட்டம் கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வருவாய் கிராமங்களை தனது ஆட்சி எல்லைகளாக கொண்டு செயல்படும்.

| வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வரிசை எண் | வருவாய் கிராமத்தின் எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| கிள்ளியூர் | 1.மிடாலம் | 1 | 15 | மிடாலம் 'அ' |
| | (கிராமங்கள்–13 ) | 2 | 41 | மிடாலம் 'ஆ' |
| | | 3 | 42 | கருங்கல் |
| | | 4 | 43 | மத்திக்கோடு |
| | | 5 | 14 | கீழ்மிடாலம் 'அ' |
| | | 6 | 40 | கீழ்மிடாலம் 'ஆ' |
| | | 7 | 16 | கீழ்குளம் 'அ' |
| | | 8 | 44 | இனயம்புத்தன்துறை |
| | | 9 | 45 | கீழ்குளம் 'ஆ' |
| | | 10 | 17 | கிள்ளியூர் 'அ' |
| | | 11 | 46 | கிள்ளியூர் 'ஆ' |
| | | 12 | 23 | பாலூர் கிராமம் |
| | | 13 | 55 | முள்ளங்கினாவிளை கிராமம் |
| | 2.பைங்குளம் (14) | 14 | 1 | கொல்லங்கோடு 'அ' |
| | | 15 | 24 | கொல்லங்கோடு 'ஆ' |
| | | 16 | 25 | சூழால் |
| | | 17 | 19 | குளப்புறம் |
| | | 18 | 50 | அதங்கோடு |
| | | 19 | 4 | ஆறுதேசம் |
| | | 20 | 29 | முஞ்சிறை |
| | | 21 | 3 | பைங்குளம் |
| | | 22 | 28 | தேங்காய்பட்டணம் |
| | | 23 | 2 | எழுதேசம்'அ' |
| | | 24 | 26 | எழுதேசம்'ஆ' |
| | | 25 | 27 | எழுதேசம்'இ' |
| | | 26 | 5 | மெதுகும்மல் |
| | | 27 | 30 | அடைக்காகுழி |

புதியதாக உருவாக்கப்படும் கிள்ளியூர் வட்டத்தில் உள்ளடங்கும் மிடாலம் மற்றும் பைங்குளம் ஆகிய குறுவட்டங்களில் தற்போது கையாளப்படும் அதிகாரங்கள் இனி கிள்ளியூர் வட்டாட்சியரால் கையாளப்படும்.

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

18/2/19
பிரிவு அலுவலர்.
18/2/19

அரசாணை (நிலை) எண்.59, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019

## அறிவிக்கை–II

விளவங்கோடு வட்டத்தில் வட்டப்பிரிவினைக்கு முன் உள்ள குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரம்

| வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வரிசை எண் | வருவாய் கிராமத்தின் எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| விளவங்கோடு | 1.பைங்குளம் (14) | 1 | 1 | கொல்லங்கோடு 'அ' |
| | | 2 | 24 | கொல்லங்கோடு 'ஆ' |
| | | 3 | 25 | சூழால் |
| | | 4 | 19 | குளப்புறம் |
| | | 5 | 50 | அதங்கோடு |
| | | 6 | 4 | ஆறுதேசம் |
| | | 7 | 29 | முஞ்சிறை |
| | | 8 | 3 | பைங்குளம் |
| | | 9 | 28 | தேங்காய்பட்டணம் |
| | | 10 | 2 | எழுதேசம்'அ' |
| | | 11 | 26 | எழுதேசம்'ஆ' |
| | | 12 | 27 | எழுதேசம்'இ' |
| | | 13 | 5 | மெதுகும்மல் |
| | | 14 | 30 | அடைக்காகுழி |
| | 2.விளவங்கோடு(10) | 15 | 9 | விளவங்கோடு |
| | | 16 | 34 | களியக்காவிளை |
| | | 17 | 35 | குழித்துறை நகரம் |
| | | 18 | 7 | நல்லூர் |
| | | 19 | 18 | நட்டாலம் 'அ' |
| | | 20 | 47 | உண்ணாமலைக்கடை |
| | | 21 | 48 | நட்டாலம் 'ஆ' |
| | | 22 | 49 | கொல்லஞ்சி கிராமம் |
| | | 23 | 6 | குன்னத்தூர் |
| | | 24 | 31 | வினாத்துறை கிராமம் |
| | 3.இடைக்கோடு (9) | 25 | 11 | இடைகோடு |
| | | 26 | 37 | தேவிக்கோடு |
| | | 27 | 8 | பாகோடு 'அ' |
| | | 28 | 32 | மருதங்கோடு |
| | | 29 | 33 | பாகோடு 'ஆ' |
| | | 30 | 20 | அண்டுகோடு 'அ' |
| | | 31 | 51 | அண்டுகோடு 'ஆ' |
| | | 32 | 10 | பளுகல் கிராமம் |
| | | 33 | 36 | மலையடி |
| | 4.அருமனை(9) | 34 | 12 | அருமனை |
| | | 35 | 38 | மஞ்சாலுமூடு |
| | | 36 | 21 | வெள்ளாங்கோடு |
| | | 37 | 52 | முழுக்கோடு |

//த.பி.பா.//

| | | | | |
|---|---|---|---|---|
| | | 38 | 53 | சிதறால் |
| | | 39 | 13 | களியல் |
| | | 40 | 39 | கடையால் |
| | | 41 | 22 | மாங்கோடு |
| | | 42 | 54 | புலியூர்சாலை |
| | 5.மிடாலம் | 43 | 15 | மிடாலம் 'அ' |
| | (கிராமங்கள்–13 ) | 44 | 41 | மிடாலம் 'ஆ' |
| | | 45 | 42 | கருங்கல் |
| | | 46 | 43 | மத்திக்கோடு |
| | | 47 | 14 | கீழ்மிடாலம் 'அ' |
| | | 48 | 40 | கீழ்மிடாலம் 'ஆ' |
| | | 49 | 16 | கீழ்குளம் 'அ' |
| | | 50 | 44 | இனயம்புத்தன்துறை |
| | | 51 | 45 | கீழ்குளம் 'ஆ' |
| | | 52 | 17 | கிள்ளியூர் 'அ' |
| | | 53 | 46 | கிள்ளியூர் 'ஆ' |
| | | 54 | 23 | பாலூர் கிராமம் |
| | | 55 | 55 | முள்ளங்கினாவிளை கிராமம் |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

18/2/19

பிரிவு அலுவலர்.

18/2/19

அரசாணை (நிலை) எண்.59, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019

## அறிவிக்கை–III

விளவங்கோடு வட்டத்தில் வட்டப்பிரிவினைக்கு பின் உள்ள குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரம்

| வ.எண் | வருவாய் கிராமம் எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| விளவங்கோடு குறுவட்டம் | | |
| 1 | 9 | விளவங்கோடு |
| 2 | 34 | களியக்காவிளை |
| 3 | 35 | குழித்துறை நகரம் |
| 4 | 7 | நல்லூர் |
| 5 | 18 | நட்டாலம் ‘அ’ |
| 6 | 47 | உண்ணாமலைக்கடை கிராமம் |
| 7 | 48 | நட்டாலம் ‘ஆ’ |
| 8 | 49 | கொல்லஞ்சி கிராமம் |
| 9 | 6 | குன்னத்தூர் |
| 10 | 31 | வினாத்துறை கிராமம் |
| இடைக்கோடு குறுவட்டம் | | |
| 11 | 11 | இடைகோடு |
| 12 | 37 | தேவிக்கோடு |
| 13 | 8 | பாகோடு ‘அ’ |
| 14 | 32 | மருதங்கோடு |
| 15 | 33 | பாகோடு ‘ஆ’ |
| 16 | 20 | அண்டுகோடு ‘அ’ |
| 17 | 51 | அண்டுகோடு ‘ஆ’ |
| 18 | 10 | பளுகல் கிராமம் |
| 19 | 36 | மலையடி |
| அருமனை குறுவட்டம் | | |
| 20 | 12 | அருமனை |
| 21 | 38 | மஞ்சாலுமூடு |
| 22 | 21 | வெள்ளாங்கோடு |
| 23 | 52 | முழுக்கோடு |
| 24 | 53 | சிதறால் |
| 25 | 13 | களியல் |
| 26 | 39 | கடையால் |
| 27 | 22 | மாங்கோடு |
| 28 | 54 | புலியூர்சாலை |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

18/2/19

பிரிவு அலுவலர்.

18/2/19